**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**

**MCOP.No.54/2024**

2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 31 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

ம.சா.2 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திருமதி. மகாலெட்சுமி, Gr.II Bench Clerk அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | செல்லதுரை | த/பெ.: | கோவிந்தசாமி |
| கிராமம்: | கடியாச்சேரி | தாலுக்கா: | திருத்துறைப்பூண்டி |
| மதம்: | இந்து | தொழில்: | டிராக்டர் ஓட்டுநர் |
| வயது: | 41 | முகவரி: | கடியாச்சேரி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 31.10.2025.

**முதல் விசாரணை:–**

நான் இந்த மனுவில் மனுதாரர்கள் தரப்பு சாட்சி ஆவேன். நான் எனது முதன்மை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன் அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். நான் சொல்லிதான் தயார் செய்யப்பட்டது.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:–**

இந்த மனுதாரர்கள் எனக்கு உறவினரா என்றால் ஊர்க்காரர், தெரிந்தவர். இந்த விபத்து சம்பந்தமாக நான் காவல் நிலையத்தில் புகார் ஏதும் கொடுத்தேனா என்றால் இல்லை. இந்த விபத்து சம்பந்தமாக வேறு நீதிமன்றத்தில் ஏதேனும் சாட்சி சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. இறந்த குழலரசனும், மணிகண்டனும் வாகனத்தில் சென்ற விவரங்களை யார் கூறினார் என்றால் நான் அங்கு சாப்பிட சென்றதால் சாப்பிட்டு விட்டு நானும், கண்ணனும் வெளியில் இருந்து பேசிக்கொண்டிருந்த போது மேற்படி விபத்து ஏற்பட்டது நான் பார்த்தேன். TN 49 R 3694 என்ற வாகனத்தின் உரிமையாளர் யார் என்று எனக்கு தெரியாது. எனது நிரூபண

வாக்குமூலத்தில் போலீசார் இந்த விபத்தை குறித்து எந்த தேதி, மாதம், வருடம் விசாரித்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். எந்த இடத்தில் வைத்து என்னை போலீசார் விசாரித்தார்கள் என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் கூறியுள்ளது போல எந்த சம்பவத்தையும் பார்க்கவில்லை. மனுதாரர்கள் எனக்கு தெரிந்த நபர்கள் என்பதால் அவர்கள் கேட்டுக்கொண்டதிற்கிணங்க பார்க்காத விபத்தை பார்த்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. மனுதாரர்கள் இழப்பீடு அதிகம் பெற வேண்டும் என்பதற்காக மனுதாரர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.